**செ.வெ.எண்: 740** **நாள்:22.09.2025**

**செய்தி வெளியீடு**

திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில், வருவாய் வட்டம் வாரியாக காலியாக உள்ள 151 கிராம உதவியாளர் பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் நேரடியாக விண்ணப்பங்கள் பெற்று பணி நியமனம் மேற்கொள்வது தொடர்பாக 23.07.2025 அன்று தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதில் வயது வரம்புரை தொடர்பாக கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

| **திருத்தத்திற்கு முன்பு** | **திருத்தத்திற்கு பின்பு** |
|---|---|
| 01.07.2025 அன்று<br>• பொதுப்பிரிவினர் : 32 வயதுக்குள்<br>• இதர பிரிவினருக்கு: 37 வயதுக்குள் | 01.07.2025 அன்று<br>• பொதுப்பிரிவினர் : 32 வயதுக்குள்.<br>• பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட/ஆதரவற்ற விதவையினர் : 39 வயதுக்குள்.<br>• தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர்/ ஆதரவற்ற விதவையினர்: 42 வயதுக்குள் |

இதனை தவிர வேறு திருத்தங்கள் ஏதுமில்லை எனவும், திருத்தத்திற்கு பிறகு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து மேற்படி பணிக்கான விண்ணப்பத்தினை https://tiruvallur.nic.in/ என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து 08.10.2025 வரை மாலை 05.45 மணிக்குள் சம்மந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை அனுப்ப மாவட்ட ஆட்சியர் திரு.மு.பிரதாப், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.**